செ.வெ.எண் : 953/2017 நாள்: 10.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்சேதங்கள் குறித்து 60% கணக்கெடுக்கும் பணிகள் முடிந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது. வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர் அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஓகி புயல் காரணமாக பலத்த புயல் காற்றுடன் மழை பெய்ததால் மாவட்டம் முழுவதும் பலத்த சேதங்கள் ஏற்பட்டது. இந்த சேதங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இதில் அகஸ்தீஸ்வரம் வட்டாரம், லீபுரம் கிராமம், இராஜாக்கமங்கலம் வட்டாரம், வடீவீஸ்வரம் தெற்கு மற்றும் குருந்தன்கோடு வட்டாரம் கல்படி ஏலா பகுதிகளில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர் ஆய்வு செய்தபோது தெரிவித்ததாவது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 100 வருடங்களில் இல்லாத அளவில் ஓகி புயல் மற்றும் கனமழை காரணமாக வாழை, மரவள்ளி, ரப்பர், கிராம்பு, நல்ல மிளகு, கமுகு போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைப்பயிர்களான பழங்கள், காய்கறிகள், வாசனை திரவிய பயிர்கள், மற்றும் மலர் பயிர்கள் 41186 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு இருந்ததில் முக்கிய பயிர்களான ரப்பர் மரங்கள் சுமார் 5.63 இலட்சம் எண்களும், வாழை சுமார் 48.15 இலட்சம் எண்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய் துறை இணைந்து மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 3623 ஹெக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களின் சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணி விரைந்து நடைபெற்று 60% பணிகள் முடிவடைந்துள்ளன. இதன்படி தற்போதைய சேத விபரம் தோட்டக்கலை பயிர்கள் 2183 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 40% கணக்கெடுக்கும் பணிகள் விரைந்து முடித்திட துரித பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**